கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No.328/2021**

திருமதி. கலைச்செல்வி (D.W –1) **8.7.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவாவில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த விவரங்கள் படித்துப் பார்த்துள்ளேன் என்றால் ஆமாம். 3ம் பிரதிவாதி வாதிகளுடன் பிறந்த சகோதரர் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் 3ம் பிரதிவாதி கையொப்பம் செய்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. எதிர் வழக்குரை பத்தி 8ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எதிர்வழக்குரை பத்தி 8ல் சொல்லி உள்ளவாறு தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்ய வேண்டியது என்றுதான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை.

2. எதிர்வழக்குரை சங்கதிகளை பொய்யாக திருத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளேன் என்றால் தவறு. அவிநாசி வட்டம் கதவு எண். 164, பெரிய தோட்டம், முறியாண்டம்பாளையம் என்பது என்னுடைய முகவரி என்றால் சரி. சந்தீப் என்னுடைய மகன் என்றால் ஆமாம். அவருடைய முகவரியும் அதுதான் என்றால் ஆமாம். அவர் ஏன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் அவர் வெளிநாட்டில் உள்ளார். எதிர்வழக்குரை சங்கதிகள் தெரிந்து கொண்டு எதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று எனக்கு தெரியும் என்றால் ஆமாம். தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் என்னுடைய கையெழுத்தோ, இரண்டாம் பிரதிவாதியின் கையெழுத்தோ

இல்லை என்றால் சரி. அது என் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ளது. என்னுடைய கணவரின் கையொப்பத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் சரி.

3. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் தேதி என்ன என்றால் 8.8.2013 ம் தேதி. 8.8.2013 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடைய கணவருடையது என்றால் சரியாகத் தெரியவில்லை. சந்தேகமாக உள்ளது. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கணவருடையது என்றால் சரி. அன்றைய தேதியில் என்னுடைய கணவர் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அது யார் வேண்டுமானாலும் கையொப்பம் செய்ய முடியும். தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் அவிநாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.

4. தாவா கிரைய ஒப்பந்த ஆவண விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது என்றால் சொத்து எங்கு உள்ளது என்பது எனக்கு தெரியும். அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. கிரைய ஒப்பந்த சொத்தில் மொத்த விஸ்தீரண சதுர அடிகள் என்ன என்றால் 0.4 சென்ட் என்று சொன்னார்கள். தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் திருப்பூர் இணை சார்பதிவாளர் இரண்டு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் நான் அவினாசி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாக சொன்னதிலிருந்து எனக்கு கிரைய ஒப்பந்த ஆவணத்தின் சங்கதிகள் தெரியவில்லை என்றால் தாவா கிரைய ஒப்பந்த ஆவணம்

என்னுடைய கணவருக்கும் வாதிகளுக்கும் இடையே கடனுக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் தவறு.

5. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில் அந்த சொத்தில் கிரயம் பெற நானும் என்னுடைய கணவரோ எந்த முயற்சிகளும் மேற்கொள்ளவில்லை என்றால் தவறு. என் கணவர் முயற்சி செய்தார். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் அனுப்பிய சட்ட அறிவிப்பு பதில் அனுப்பவில்லை என்றால் தவறு பதில் நோட்டீஸ் அனுப்பினோம். தவறாக சாட்சியும் அளிக்கிறேன் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்று எதிர் வழக்குரையில் வாதுரைத்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொருத்து கிரையம் பெறுவதற்காக கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டிருந்தால் சொத்தில் விவரங்களும் கிரையம் பெற வேண்டிய விவரங்களும் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. என் கணவர் கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி இறந்து போனார்.

6. 2011 ஆம் வருடத்தில் இருந்து வாதிகளுக்கும் என்னுடைய கணவருக்கும் கொடுக்கல் வாங்கல் போக்குவரத்து இருந்து வந்தது என்றால் எனக்குத் தெரியாது. 21.2.2011 ம் தேதி என்னுடைய கணவர் வாதிகளின் தந்தை மாணிக்கத்திற்கு கடன் கொடுத்து கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியில் வாதிகள் ஒரு ஏ.ஆர்.ராமசாமியிடம் பெற்ற கடனுக்காக ஏற்படுத்திய கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்த போது என்னுடைய கணவர் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் கணவரிடம் இருந்து தொகையை பெற்றுத்தான் அந்த கடனை அடைத்தார்கள் என்றால் தெரியாது. தாவா கிரைய ஒப்பந்த ஆவணமும் என்னுடைய கணவர் கொடுத்த கடனுக்காக தான் அன்றைய தினமே ஏற்படுத்தப்பட்டது என்றால்

எனக்குத் தெரியாது. என்னுடைய கணவர் எந்த தேதியில் இறந்து போனார் என்றால் 9.5.2019.

7. என் கணவர் இறந்த பிறகு உண்மையிலேயே தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் சொத்தை கிரையம் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்தால் சொத்தை கிரையம் பெறுவதற்கு நான் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் தவறு. என் கணவர் விபத்தில் இறந்து போனதால் ஆவண விவரங்கள் எனக்கு தெரியவில்லை. சாட்சி தானாக முன்வந்து வாதிகள் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள முன் தொகையை வேறு நபரிடம் வாங்கி கொடுத்து விடுவதாகவும் கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்து கொடுக்குமாறு கேட்டார்கள் என்று கூறுகிறார். தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கிரைய காலத்தை தெரிந்து கொண்டீர்களா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு வந்த பிறகுதான் இரண்டு வருடங்கள் என்பது தெரிய வந்தது.

8. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் கிரைய சொத்தை கிரயம் பெறுவதற்கான காலதாமதம் உள்ளது. காலவரையால் பாதிப்படைகிறது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு உரிய அசல் உரிமை ஆவணங்களை என் கணவர் உயர்ந்த போது வாதிகளிடம் கொடுத்துவிட்டார் என்றால் தவறு. நான் தான் வாதிகளிடம் உரிமை ஆவணங்களை கொடுத்தேன். எதிர் வழக்குரையில் நான் தான் உரிமை ஆவணங்களை வாதிகளிடம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் தான் ஆவணங்களை அவர்களிடம் கொடுத்தேன். நீலாம்பாளும் அவருடைய மகனும் வந்து வாங்கிச் சென்றார்கள்.

9. 22.4.2019 ம் தேதி வாதிகள் அவர்களுடைய தாயார் மூன்றாம் பிரதிவாதி ஆகியோர் முன் தொகையை செலுத்தி விட்டு தாவா சொத்திற்குரிய உரிமை

ஆவணங்களை என்னுடைய கணவரிடமிருந்து திரும்ப பெற்றார்கள் என்றால் தவறு. தாவா கிரைய ஒப்பந்த ஆவணத்தை ரத்து செய்வதற்குள் என்னுடைய கணவர் விபத்தில் இறந்து போனதால் அதை ரத்து செய்ய முடியவில்லை என்றால் தவறு. என்னுடைய கணவருக்கு நானும் இரண்டாம் பிரதிவாதியும் வாரிசுகள் என்றால் சரி. என்னுடைய மகன் வெளிநாட்டில் படித்து வருவதால் அவர் வந்த பிறகு தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தை ரத்து செய்வதாக சொல்லி காலம் தாழ்த்தி வந்தீர்கள் என்றால் தவறு.

10. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களுக்கு தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் கடனுக்காக ஏற்பட்டதும் கடன் என் கணவர் வாதிகளுக்கு கொடுத்ததும் வாதிகள் அந்த கடனை என் கணவரிடம் திருப்பிக் கொடுத்தது அனைத்தும் தெரியும் என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. வாதிகள் எந்த ஒரு தொகையும் 1, 2 பிரதிவாதிகளுக்கு தர வேண்டியது இல்லை. தாவா சொத்தில் கிரைய ஒப்பந்த ஆவணத்தின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகளுக்கு உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் தவறு. முன் தொகையை திருப்பி வாதிகள் செலுத்தி விட்டால் கிரைய ஒப்பந்த ஆவணத்தை நான் ரத்து செய்ய தயாராக உள்ளேன் என்று சாட்சி தன்னிச்சையாக முன்வந்து கூறுகிறார்.

11. எதிர் வழக்குரையுடன் தாவா முன் தொகையை திரும்ப பெற எதிர் கோரிக்கை மனு தாக்கல் செய்யவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. வழக்கில் எனக்கு எதிர்வாதமே இல்லை மூன்றாம் பிரதிவாதியை துணை வைத்துக்கொண்டு பொய்யான எதிர்வாதம் ஏற்படுத்தி பொய் வழக்கு

ஆடுகிறேன் என்றால் தவறு. என்னுடைய சாட்சி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதிகள் கோரியபடி தாவா தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.07.08 19:08:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.